வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-வான்மதி

தேதி 7.2.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, சட்டீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில் பஸ்தர் பந்தம் விழாவை இன்று தொடக்கி வைத்தார்.

2 நாள் அரசு முறைப் பயணமாக மலேசியா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றில் இந்த ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் கவனம் செலுத்துவதாக மத்திய தகவல் ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

இளையோர் கிரிக்கெட்டில் உலக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, சட்டீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில் பஸ்தர் பந்தம் விழாவை இன்று தொடக்கி வைத்தார். இந்த விழாவின் மூலம் நம்நாடும் உலகமும் பஸ்தார் பிராந்தியத்தின் வளமான பழங்குடி கலாச்சாரத்தின் பெருமையைப் பற்றி அறிய முடியும் என்று திருமதி முர்மு தெரிவித்தார். மேலும் இப்பகுதியில் பாதுகாப்பின்மையும் நம்பிக்கையற்ற நிலை இருந்த தாகவும் கூறிய அவர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் தொடர்பில் இருந்த பெரும்பாலான மக்கள் வன்முறையைக் கைவிட்டு அமைதியான வாழ்க்கைக்கு திரும்பி உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பல்வேறு நலத் திட்டங்களை மத்திய அரசு இவர்களுக்காக செயல்படுத்தி வருவதையும் திருமதி முர்மு சுட்டிக்காட்டினார். இவ்விழாவில் 84 குழுக்களைச் சேர்ந்த 700-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர். கைவினைப் பொருட்கள் பாரம்பரிய பழங்குடி உணவு வகைகள் மற்றும் பழங்குடி இசைக் கருவிகள் உள்ளிட்டவையும் காட்சி படுத்தப்பட்டுள்ளன. வரும் 9-ஆம் தேதி வரை மண்டல அளவிலான போட்டிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த தொடக்க விழாவில் சட்டீஸ்கர் மாநில ஆளுநர் திரு ராமன்தேக்கா மற்றும் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோசாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*மோடி-மலேசியா*

2 நாள் அரசு முறைப் பயணமாக மலேசியா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கோலாலம்பூர் விமான நிலையத்தில் திரு நரேந்திர மோடியின் நண்பரும் மலேசிய பிரதமருமான திரு அன்வர் இப்ராகிம் அவருக்கு அன்பான வரவேற்பு அளித்தார். பின்னர் இருவரும் கோலாலம்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய திரு மோடி, இருநாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய அவர் மலேசிய நாட்டின் வளர்ச்சிக்காக இந்திய வம்சாவளியினர் அளப்பரிய பங்காற்றி வருவதாக கூறினார். மலேசியா வாழ் இந்தியர்களிடையே கலந்துரையாடிய திரு மோடி, இருநாடுகளுக்கு இடையே நட்புறவு பாலமாக அவர்கள் திகழ்வதாகவும் புகழாரம் சூட்டினார். வரவேற்பு நிகழ்ச்சியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பிரதமர் தமது இந்த பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பும், நட்புணர்வும் மேலும் வலுப்பெறும் என்றும் ராணுவப் பாதுகாப்பு, பொருளாதாரம், படைப்பாற்றல் திறன் பங்களிப்பு, உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து அந்நாட்டு பிரதமர் திரு அன்வர் இப்ராகிம்-உடன் இருதரப்பு பேச்சு

வார்த்தை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் தமது புறப்பாட்டு அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

மோடி

இந்தியா-அமெரிக்கா இடையே இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்…………….

(வாய்ஸ்)

ரஷ்யாவிடம் இருந்து தொடர்ந்து எண்ணெய் வாங்கி வரும் இந்தியாவை திரு டிரம்ப் கண்டித்து இந்திய ஏற்றுமதி பொருட்களுக்கு முதலில் 25 சதவிகித வரியையும் பின்னர் கூடுதலாக 25 சதவிகித அபராத வரியையும் விதித்திருந்தார். தற்போது ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எண்ணெய் வாங்குவதை நிறுத்த ஒப்புக் கொண்டுள்ளதாகவும் இதனால் இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு டிரம்ப் தெரிவித்துள்ளார். மேலும் 25 சதவிகித அபராத வரியை குறைப்பதாகவும் அவர் கூறி உள்ளார். திரு டிரம்பின் இந்த நடவடிக்கைகு இந்தியா நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் இருநாடுகளுக்கும் இடையேயான நம்பிக்கையையும் ஆழமான பங்களிப்பையும் இந்த ஒப்பந்தம் பிரதிபலிப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார். மேலும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், விவசாயிகள், தொழில் முனைவோர், புதிய கண்டுபிடிப்பாளர்கள், மற்றும் மீனவர்கள் உள்ளிட்டோருக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் மேக்-இன்-இண்டியா திட்டம் வலுப்பெறும் என்றும் பிரதமர் பதிவிட்டுள்ளார். பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு பெரிய அளவிலான வேலை வாய்ப்பை உருவாக்கும் என்றும் அவர் கூறி உள்ளார். புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதில் இந்தியாவும்-அமெரிக்காவும் உறுதி

பூண்டுள்ளதாகவும், இந்த கட்டமைப்பு, முதலீடு மற்றும் தொழில்நுட்ப கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் என்றும் இதன் மூலம் உலகளாவிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் திரு மோடி குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் இறுதி கட்டத்தை எட்டி உள்ளதைத் தொடர்ந்து தற்போது இந்திய ஏற்றுமதிகளுக்கான வரி 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறி உள்ளார். 30 டிரில்லியன் டாலர் மதிப்பு கொண்ட சந்தை வாய்ப்புகள் நமது ஏற்றுமதியாளர்களுக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளதாகவும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் நம்நாட்டு பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் லட்ச கணக்கான புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அமைச்சர் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*பூபேந்தர் யாதவ்*

புலிகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலங்களின் தலைமை வனவிலங்கு காவலர்கள் மற்றும் புலிகள் காப்பகங்களின் கள இயக்குநர்கள் பங்கேற்ற மாநாடு மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் தலைமையில் ராஜஸ்தான் மாநிலம் ஆல்வாரில் இன்று நடைபெற்றது. இம்மாநாட்டில் ஏற்கனவே எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகள் பற்றிய ஆய்வும், மேலும் புலிகளைப் பாதுகாப்பதில் ஏற்படும் சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

*ஜேபி நட்டா*

அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனங்களின் எண்ணிக்கை நாடு முழுவதும் 6-ல் இருந்து 23-ஆக உயர்ந்துள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா கூறி உள்ளார். ஃபரிதாபாத்தில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்றில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர் தாய்-சேய் நலம், தொற்று மற்றும் தொற்று அல்லாத நோய்கள் உள்ளிட்ட முக்கிய

சுகாதார பிரிவுகளில் இந்தியா குறிப்பிடத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது என்று, குறிப்பிட்டார். நாட்டில் காசநோயை கட்டுப்படுத்துவதில் இந்தியா உலக சராசரியை விட 2 மடங்கு அதிகம் செயலாற்றி வருவதாகவும் இதனை உலக சுகாதார நிறுவனம் பாராட்டி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

*எல் முருகன்*

2026-27 -ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், தரமான உற்பத்தியை மேம்படுத்துதல் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதாக மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். அவர் இன்று புதுச்சேரியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்த கூடுதல் தகவல்கள் ............

(வாய்ஸ்-முருகன்)

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது மாநில உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், பாஜக மாநிலத் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு வி பி ராமலிங்கம், மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு சாய் ஜே சரவணன் குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

*கருத்தரங்கம்*

விபத்துக்கால அவசர சிகிச்சை குறித்த சர்வதேச கருத்தரங்கம் ஜிப்மர், ஏபிஜே அப்துல் கலாம் கலையரங்கில் இன்று தொடங்கியது. புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் குத்து விளக்கு ஏற்றி கருத்தரங்கை தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் ஜிப்மர் நிறுவனம் தனது தரமான சிகிச்சை மற்றும் மருத்துவ புத்தாக்கத்திற்கான பங்களிப்பிற்காக உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்று கூறினார். புதுச்சேரி சுகாதார சுற்றுலா மையமாக மேம்பட்டு வருகிறது என்றும்

ஆயுஷ்மான் பாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்கள் பெரிதும் பயன் அடைந்து வருவதாகவும் தெரிவித்தார். நடப்பு வரவு-செலவு திட்டத்தில் மத்திய அரசு பொது சுகாதார பராமரிப்பு துறைக்கு அதிக முன்னுரிமை அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். இவ்விழாவில் ஜிப்மர் நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி, கல்விப் புல முதல்வர் டாக்டர் விக்ரம் காடே, மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் வினோத் குமார் சகா, புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் மேனாள் இயக்குநர் டாக்டர் எம்சி மிஸ்ரா அமெரிக்கன் கல்லூரியின் கல்வி திட்ட தலைவர் டாக்டர் மையூர் நாராயண் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*சுப்பையா*

மக்கள் தலைவர் வ சுப்பையாவின் பிறந்த நாளை முன்னிட்டு புதுச்சேரி அரசு சார்பில் நெல்லித் தோப்பு சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாநாட்டையொட்டி நாளை புதுச்சேரி கடற்கரையில், விழிப்புணர்வு வாக்கத்தான் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*கிரிக்கெட்*

ஜிம்பாவே, ஹராரேயில் இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற 19 வயதிற்கு உட்பட்டோர்களுக்கான ஆண்கள் உலக கோப்பை இறுதிப் போட்டியில் இந்தியா 100 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி 6-ஆவது முறையாக கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது. உலக கோப்பையை வென்ற இளைஞர்களுக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். உலக கோப்பையை வென்ற இந்திய அணிக்கும் தொழில் நுட்ப ஊழியர்கள் மற்றும் தேர்வுக் குழுவிற்கும் மொத்தம் 7.5 கோடி ரூபாயை ரொக்க பரிசாக BCCI அறிவித்துள்ளது.

கண்காட்சி

புதுடெல்லி பாரத் மண்டபத்தில் உலகின் மிகப் பெரிய பிளாஸ்டிக் கண்காட்சிகளின் ஒன்றான பிளாஸ்ட் இண்டியா 2026- கண்காட்சி நடைபெறுகிறது. இக்கண்காட்சி ஆத்மநிர்பார் திட்டத்தினைக் குறிக்கும் வகையில் பாரத் நெக்ஸ்ட் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடத்தப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தி சார்ந்த வளர்ச்சி மற்றும் பெரிய அளவிலான வேலை வாய்ப்பை ஊக்குவிக்க ஒரு சுயசார்பு தொழில் துறை தளத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்படுகிறது. இக்கண்காட்சி வரும் 10-ஆம் தேதியுடன் முடிவடையும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, சட்டீஸ்கர் மாநிலம் ஜக்தல்பூரில் பஸ்தர் பந்தம் விழாவை இன்று தொடக்கி வைத்தார்.

2 நாள் அரசு முறைப் பயணமாக மலேசியா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றில் இந்த ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் கவனம் செலுத்துவதாக மத்திய தகவல் ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

இளையோர் கிரிக்கெட்டில் உலக கோப்பையை வென்ற இந்திய அணிக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/7.2.2026/Script.

-------------------------------------------